செ.வெ.எண்-13 நாள்-07.01.2019

# பத்திரிக்கைச் செய்தி.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 01.01.2019-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு, தீவிர முறையிலான வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தல் முதலியவற்றுக்கான படிவங்கள் 01.09.2018 முதல் 31.10.2018 வரை பெறப்பட்டன. அதனைத் தொடர்ந்து, இறுதி வாக்காளர் பட்டியல் 04.01.2019 அன்று வெளியிடப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், புயல் பாதித்த மாவட்டங்களில் வாக்காளர் பட்டியலில் திருத்த நடவடிக்கைகளை முடித்திடவும், மேலும் வாக்காளர் பட்டியலில் ஒத்த விபரங்களைக் கொண்ட வாக்காளர்களை சரிபார்த்தல் மற்றும் தர்க்கப் பிழைகளை சரிசெய்தல் போன்ற பணிகளை முழுமையாக முடித்திடவும் கால அவகாசம் கோரப்பட்டதின் பேரில், இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாளாக முன்பு அறிவிக்கப்பட்டிருந்த 04.01.2019-ஐ நீட்டிப்பு செய்து 21.01.2019 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிட இந்திய தேர்தல் ஆணையம் அனுமதி அளித்துள்ளது.

அதன் அடிப்படையில், அரியலூர் மாவட்டத்தில் அடங்கியுள்ள 149.அரியலூர் மற்றும் 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகளுக்கான இறுதி வாக்காளர் பட்டியல் எதிர்வரும் 21.01.2019 அன்று வெளியிடப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**